Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC . No. 174/2018
DEPOSITION OF PETITIONER SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | மசிகா | Calling: | இல்லத்தரசி |
| Father's/Husband's Name: | அப்துல்ரகீம் | Religion: | |
| Village: | நேதாஜீ நகர் | Age: | 37 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 09.07.2026 நேரம் : 12.52 PM

(எதிரி ஆஜர் .)

பு.சா.2 எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை.

எனது பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் பெயரில் எந்த வங்கிகணக்கும் இல்லை என்றால் சரியல்ல. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காசோலை வாங்கிய நேரத்தில் வங்கிகணக்கு திறக்க போதிய அவகாசம் இருந்தது என்றாலும் நான் தான் வங்கி கணக்கை துவங்கவில்லை என்றாலும் சரியல்ல. காசோலை மோசடி வழக்கு யாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் அப்பா பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நான்கு காசோலைகளும் என் தந்தைபெயருக்கு கொடுக்கப்பட்டு அந்த நான்கு காசோலைகளும் திருப்பப்பட்டது என்றால் சரிதான். இந்த காசோலை வழக்கு என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் தற்போது அந்த காசோலையில் எனக்கு பங்கு உள்ளது என சொல்கிறேன் என்றாலும் இதில்

யார் கடனாளி என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, நிஜாமுதின் தான் தரவேண்டும். இந்த காசோலை வழக்கில் நிர்பந்தப்படுத்தி பிரமான வாக்குமூலத்தில் தவறான சங்கதிகளை கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எந்த கடனுக்காகவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எந்த கடனுக்காகவும் கொடுக்கப்படவில்லை என்பதால் இந்த வழக்கு காசோலை மோசடி வழக்கின் கீழ் வராது என்றால் சரியல்ல. என் அப்பாவை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என் கணவர் ரயிலில் இருந்து இறங்கும் போது ஒரு பையில் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்த அன்றே வீட்டில் இருந்த அனைத்து பொருட்களையும் பணத்தையும் எடுத்து சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. இந்த காசோலைக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அதனால் நீதிமன்றத்தில் எந்த விதமான இழப்பீடும் வாங்க முடியாது என்றாலும் சரியல்ல. எனக்கு மூன்றாவது திருமணம் எப்போது நடந்தது என்றால் 23.05.2019 ம் வருடம் நடந்தது. வாணியம்பாடியில் உள்ள நியூடெல்லி மசூதியில் நடந்தது. 1 மற்றும் 2 வது எதிரிகள் சுயமாக சம்பாதித்த சொத்தில் எனக்கு எவ்வித பங்கும் இல்லை என்றால் சரியல்ல. நானும் என் கணவர் முகமது சுல்தானும் 23.07.2017 ம் வருடம் மதியம் சுமார் 01.30 மணிக்கு சென்னை சென்ரல் ரயில்வே நிலையத்தில் இருந்து ரயில் ஏறினோம் என்றால் சரிதான். என் கணவருக்கு அந்த ரயிலில் வரும் போது எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனது பிராமான வாக்குமூலத்தில் இந்த வழக்கின் காசோலை என்னுடைய எதிர்கால நலனுக்காக கொடுக்கப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) மசிகா

SRIPATHI K

SRIPATHI K
2026.07.09
17:47:27
+0530